**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க..எண்.3135/ஆ5/2025, நாள்.29/08/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2025–2026 மன்றச் செயல்பாடுகள் – இலக்கிய மன்றம், வினாடிவினா மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் மன்றங்களுக்கான வட்டார அளவிலான போட்டிகள் நடைபெறுதல் – பள்ளி அளவில் முதல் இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – சார்பு

பார்வை
1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34874/எம்1/இ1/2025, நாள். 17/07/2025
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34874/எம்1/இ1/2025, நாள். 11.08.2025
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34874/ எம்1/இ1/2025, நாள். 25.08.2025
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 28.08.2025

.....

பார்வை 1 மற்றும் 2ல் காணும் செயல்முறைகளின்படி, 2025–2026 ஆம் ஆண்டில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான, இலக்கிய மன்றம், வினாடிவினா மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் மன்றங்களுக்கான பள்ளி அளவிலான போட்டிகளை நடத்துதல் சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டு அதன்படி, பள்ளி அளவில் போட்டிகள் நடத்தப்பட்டது.

பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், வட்டார அளவிலான மன்றப் போட்டிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. வட்டார அளவிலான மன்றப் போட்டிகள் 02.09.2025 முதல் 04.09.2025 ஆகிய நாட்களில் திட்டமிட்டு நடத்தி வெற்றியாளர்களின் விவரங்கள் 05.09.2025க்குள் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளி அளவில் நடைபெற்ற இலக்கிய மன்றம் சார்ந்த ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பிடித்த மாணவர் மற்றும் வினாடி வினா மன்றப் போட்டியில் முதலிடம் பெற்ற குழு (இரண்டு மாணவர்கள்) மற்றும் சிறார் திரைப்படம் மன்றம் சார்ந்த ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெற்ற மாணவர் மட்டும் அடுத்த நிலைப் போட்டியான வட்டார அளவிலான போட்டியில் தவறாமல் பங்கேற்க செய்வது தலைமையாசிரியர்களின் பொறுப்பாகும்.

வட்டார அளவிலான மன்றச் செயல்பாடு போட்டிகள் கீழ்காணும் அட்டவணைப்படி நடைபெறவுள்ளது.

**வட்டார அளவிலான மன்றப் போட்டிகள்**

**இலக்கிய மன்றம் போட்டிகள் நடைபெறும் நாள் – 02.09.2025**

**வினாடி வினா மன்றப் போட்டிகள் நடைபெறும் நாள். – 03.09.2025**

**சிறார் திரைப்படம் மன்றப் போட்கள் நடைபெறும் நாள் – 04.09.2025**

**நேரம் காலை – 9.30 மணி**

| வ. எண். | ஒன்றியம் | போட்டி நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1 | வேலூர் புறநகர் | அரசு மேல்நிலைப் பள்ளி கொணவட்டம் |
| 2 | வேலூர் நகர் | ஸ்ரீ வெங்டேஸ்வரா மேல்நிலைப் பள்ளி வேலூர். |
| 3 | அணைக்கட்டு | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அணைக்கட்டு |
| 4 | கணியம்பாடி | அரசு மேல்நிலைப் பள்ளி, கணியம்பாடி |
| 5 | காட்பாடி | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி |
| 6 | கே.வி. குப்பம் | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கே.வி. குப்பம் |
| 7 | குடியாத்தம் | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, நடுப்பேட்டை, குடியாத்தம் |
| 8 | பேர்ணாம்பட்டு | இஸ்லாமியா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பேர்ணாம்பட்டு |

1. வட்டார அளவிலான போட்டிகளுக்கு மாணவ, மாணவிகளை பாதுகாப்பாக அழைத்துச்சென்று மீண்டும் கொண்டுவந்து சேர்த்தல் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.
2. வட்டார அளவிலான போட்டிகளுக்கு செல்லும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் (Consent Letter from Parent ) கட்டாயமாக பெறப்படுதல் வேண்டும். அவ்வாறாக பெறப்படும் ஒப்புதல் கடிதங்களை முறையாக பராமரித்தல் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரின் பொறுப்பாகும்.
3. வட்டார அளவிலான போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் மாணவ . மாணவியருடன் ஒரு ஆண் ஆசிரியர், ஒரு பெண் ஆசிரியை கட்டாயம் உடன் செல்லுதல் வேண்டும்.
4. இலக்கிய மன்றப் போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெற்ற வெற்றியாளர் அடுத்த நிலைப் போட்டியான மாவட்ட நிலையான போட்டியில் பங்கு பெறுவர்.
5. வினாடி வினா மன்றப் போட்டியில் முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பெறும் இரு குழுக்களும் அடுத்தநிலைப் போட்டியான மாவட்ட நிலையிலான போட்டியில் பங்கு பெறுவர்.
6. சிறார் திரைப்படம் மன்றப் போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெற்ற வெற்றியாளர் அடுத்த நிலைப் போட்டியான மாவட்ட நிலையிலான போட்டியில் பங்கு பெறுவர்.

எனவே மேற்காணும் படி நடைபெறும் வட்டார அளவிலான மன்ற செயல்பாடு போட்டிகளில் பள்ளி அளவில் முதல் இடங்களில் வெற்றி பெற்ற 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தவறாமல் போட்டியில் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்
2. வட்டார அளவிலான இலக்கிய மன்றப் போட்டிகளுக்கான தலைப்புகள்
3. வட்டார அளவிலான வினாடி வினா மன்றப் போட்டி நடத்துவதற்கான வழிமுறைகள்
4. பள்ளி அளவிலான சிறார் திரைப்படம் மன்றப் போட்டிக்கான தலைப்புகள்
5. சிறார் திரைப்பட மன்றப் போட்டிகளை நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக) பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு
2. தலைமையாசிரியர்கள்,
   அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, காந்திநகர்,
   வேலூர் மாவட்டம். (இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூர் மாவட்டம். (மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)
4. பள்ளித் துணை ஆய்வாளர்கள்,
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை)
   வேலூர் மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)
5. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (DC),
   உதவி திட்ட அலுவலகம், காந்திநகர் (சார்ந்த வட்டார வள மேற்பார்வையார் மற்றும் ஆசிரியர் பயிற்றுநருக்கு தெரிவிக்கும் பொருட்டு)
   வேலூர் மாவட்டம். (உதவி திட்ட அலுவலர் மூலமாக)
6. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், வேலூர் மாவட்டம்.
7. ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்
8. போட்டிகள் நடைபெறும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
   (போட்டி நடைபெறுவதற்கான போதிய வசதி செய்து தர தெரிவிக்கப்படுகிறது.)